தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௰௩௨	மலர்
சடு	விரோதிகிருது, தை (1972 — சனவரி — பிப்ரவரி)	௰

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நாட்டுப் பாடல்

பேராசிரியர். வ. பெருமாள்,
எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எசு.,
முதல்நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்.

வரலாற்றுக்கண் கொண்டு நாட்டுப் பாடல்களை ஆராயுமிடத்து அவை நமக்குப் பல்வேறு உண்மைகளைப் புலப்படுத்தித் தெளிவுபடுத்தும். ஆங்கிலேயர் ஆட்சியில் வெள்ளிப் பணம் தோன்றிய வரலாற்று உண்மையை நாட்டுப் பாடல் மிகத்தெளிவாக இனிது விளக்குகின்றது.

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டானும் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி
காயிதம் போட்டானும் வெள்ளைக்காரன்
வெள்ளைக்காரன் பணம் சின்னப்பணம் — அது
வேடிக்கை செய்யுதாம் வெள்ளிப்பணம்
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டு — நீ
வேஷங் குலைந்தாயே வீராயி.

மேற் குறிப்பிட்ட பாட்டு வெள்ளைக்காரன் வெள்ளிப்பணத்தின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது மலாயா, இலங்கை முதலிய நாடுகளிலுள்ள இரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யத் தமிழகத்திலிருந்து மிகப் பலர் சென்றனர். தமிழகத்

திலிருந்து மிகப் பலர் சென்றனர். தமிழகத்திலுள்ள ஏழை எளிய உழைப்பாளர்களுக்கு ஆசை காட்டி மலாயாவிற்கும் இலங்கைக்கும் அழைத்துச் சென்றனர் கங்காணிகள். கங்காணி யின் ஆசை மொழியை நம்பி மோசம்போனதை அங்குச் சென்ற பின் உணர்ந்தார்கள் தமிழ்ப் பாட்டாளி மக்கள். மோசம் போய் ஏமாந்த நிலையில் அவர்கள் கங்காணியை விளித்துப் பாடிய பாடல்கள் பல. அவற்றுள் இரு பாடல்களை இங்குக் காண்போம்.

குடிக்கப் பாலும் கொப்பளிக்கப் பன்னீரும்
அடுக்கடுக்காத் தருவதாச் சொன்னையே கங்காணி
அங்கே குடிக்கக் கூழு டிங்குன்னுதே
தனனு தான தனனு னனு

பட்டுப் பீதாம்பரமும் பளபளக்கும் சாக்கெட்டும்
கட்டிக் கொள்ளத் தருவதாகச் சொன்னையே கங்காணி
அங்கே கட்டக் கந்தே டிங்குன்னுதே
தனனு தான தன்னு னனு

இப்பாடல்கள் பிற நாடுகளில் தமிழ்ப் பாட்டாளிகள் படும் கொடுந் துயரத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவு படுத்துகின்றன.

வரலாற்றை இனிது விளக்கும் நாடோடிப் பாடல்களும் தமிழ் மொழியில் மிகுதியாக உண்டு. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய நாடக மேடைப் பாடல்கள் வரலாற்றை அறிவிக்கும் நாடோடிப் பாடல்களாக விளங்குகின்றன. இந் தியர்கள் கறுப்பு நிறம் கொண்டவர்கள். எனவே அவர்கள் காக்கைகளாகக் கருதப்பட்டனர். ஆங்கிலேயர்கள் வெள்ளை யர்களாதலின் அவர்கள் கொக்குகளாகக் கருதப்பட்டனர். காக் கைக்கும் (இந்தியர்க்கும்) கொக்குக்கும் (ஆங்கிலேயர்க்கும்) ஆட்சி குறித்துக் காரசாரமாகச் சொற்போர் நடைபெறுகின் றது. காக்கை கொக்கை நோக்கிக் கேட்கின்றது. —

கொஞ்சமா நஞ்சமா எங்கள்கும்பி
கொதிக்கப் பணத்தைக்
கொள்ளை கொண்டு போகிறையே கொக்கே கொக்கே
வெள்ளைக் கொக்கே கொக்கே.

காக்கையின் கேள்விக்குக் கொக்கு கீழ்க்கண்டவாறு மாற்றம் உரைக்கின்றது.

அங்கே கொண்டுபோன பணத்திற்கு இந்திய சட்டசபையில்
செலவுண்டு காக்காய் காக்காய் — கருங்காக்காய் காக்காய்

சொற்போர் தொடர்ந்து நடைபெறுகின்றது காக்கை கொக்கைப் பார்த்து

கஞ்சியில்லா ஏழை மக்கள் கஷ்டப்படும் காலத்திலே
கள்ளுக்கடை ஏதுக்காக கொக்கே கொக்கே
வெள்ளைக் கொக்கே கொக்கே

என்று கேட்கின்றது. காக்கையின் கேள்விக்குக் கொக்கு

கஞ்சியில்லா ஏழைமக்கள் கள்குடித்துப் போதை வந்தால்
கவலை தெரியாதடி காக்காய் காக்காய் —
கருங்காக்காய் காக்காய்.

கொக்கின் பதில் வியப்பாக இருக்கிறது. காக்கை கொக்கிடம் மேலும் ஒரு கேள்வி கேட்கின்றது.

ஆட்டுத் தோலும் கம்பெனிக்கு ஆதியில் இடம் கொடுத்து
உங்களிடம் மாட்டிக் கொண்டோம் கொக்கே கொக்கே
— வெள்ளைக் கொக்கே கொக்கே

காக்கையின் இக்கேள்விக்கு இதோ கொக்கு பதில் கூறுகின்றது.

ஆட்டுத்தோலுக் கம்பெனிக்கு ஆதியில்இடம் வாங்கி
வண்ணப்புகை வண்டியென்ன தந்தியென்ன தபாலென்ன

இவ்வளவு நன்மைகள் செய்திருக்கின்றோமே என்று வீராப்புடன் பதில் உரைக்கின்றது.

காக்கை — கொக்கு உரையாடல் வரலாற்று உண்மையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் நாடோடிப் பாடலாகத் திகழ்கின்றது.

வரலாற்றுக் கதைகளைக் கருத்துக் கருவூலமாகக் கொண்டு அமைந்தவை கதைப்பாட்டு (Ballad). வீரம், காதல், வரலாற்று நிகழ்ச்சி அல்லது செவிவழிக்கதை இவற்றைக் கருத்துக் கருவூலமாகக் கொண்டது கதைப்பாட்டு. இவை பாடுவதற்காகவே எழுந்தவை. கதைப் பாட்டை மக்கள் நினைவில் வைத்துக்

கொள்கிறார்கள். ஆனால் ஏட்டில் எழுதுவதில்லை. மேற்குறிப்பிட்டவை கதைப்பாட்டுக்கு மேனாட்டு அறிஞர்கள் வகுத்த வரையறையாகும். ★★

ஏனைய நாடோடிப் பாடல்களைப் போலக் கதைப்பாட்டும் வாய்மொழி வாயிலாகப் பரவி (oral transmission) வந்து கொண்டிருக்கின்றது.

தேசிங்கு ராசன் கதை, அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவு, புலந்திரன் தூது, பவளக்கொடி மாலை, நல்லதங்காள் கதை, மயிலிராவணன் கதை, ராமப்பையன் அம்மானை, கட்டபொம்மன் கதை, ஊமைத்துரை கதை, தமிழறியும் பெருமாள் முதலியவை இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றுள் சிலவற்றில் வரலாற்று அம்சம் குறைவாகவும் கற்பனை மிகுதியாகவும் இருப்பதுண்டு.

முழுக்க முழுக்க மக்கள் இலக்கியமாகக் காட்சி அளிப்பது அல்லி அரசாணி மாலை. இதைப் பாடியவர் புகழேந்திப் புலவரா என்பது ஆராய்ச்சிக்குரியது. அல்லியரசாணி மாலை பாமர மக்களிடையே பெருஞ் செல்வாக்கு பெற்று விளங்குகின்றது.

அல்லியென்று பேர்சொன்னால் அழுதபிள்ளை வாய்மூடும்
அல்லியென்று பேர்சொன்னால் அண்டம் கிடுகிடென்னும்
அல்லியென்று பேர்சொன்னால் கல்லுந் தெய்வங் கூத்தாடும்

அல்லியின் வீரத்தையும் பெருமையையும் மெய்ப்பிக்க மேற்குறிப்பிட்ட பகுதியே போதும். யாரோ ஒருவர் அல்லிக்கு ஓரிரவு திருட்டுத் தாலி கட்டிவிட்டார். திருட்டுத்தாலி கட்டியவரைக் கண்டு பிடித்து பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று அல்லி துடியாத் துடிக்கிறாள்.

★★ 'Ballad is a short poem, that tells a story of some heroic deed, romance or event in history or legend' ...... 'Originally ballads were meant to be sung'...... 'People remember them but do not write them down'.
(The World Book — Encyclopaedia — Vol. II, P. 34).

ஆகாயம் போனாலும் அவனை நான் விடுவதில்லை
வானத்திற் போனாலும் வலைகட்டி நான்பிடிப்பேன்
பாதாளம் போனாலும் பேதிப்பேன் பைங்கொடி நான்

என்று அல்லி வீரவுரை கூறும்போது அவள் வீரத்தை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

கட்டபொம் மன்என்ற பேரைச்சொன் னால் இந்தக்
காசினி எங்கும் கெடிகலங்கும்
அட்ட திசையும் நடுங்கி ஒடுங்கும்
அடங்கி மடங்குவர் யாவருமே
சிட்டுப் பறக்காத பாஞ்சால நாட்டிலே
சீமைவெள் ளைக்காரர் சேர்ந்துவந்து
மட்டுப் படாதநம் கட்டபொம்மு வாளால்
மாண்டு மண்ணாகி மடிந்தொழிந்தார்
ஊமைத் துரைஎன்னும் பேரைச்சொன் னால் அங்கே
சீமைத் துரைகள்எல் லாம்நடுங்கிச்
சேமத்தை நாடியே தென்திசை நோக்காமல்
சித்தவும் கலங்குவர் மெத்தவுமே
செந்தமிழ் நாட்டில் பிறந்தா லும்இவன்
கீர்த்தி உலகம் எல் லாம்பரந்து
அந்தரம் எங்குமே முழங்கி வருவதால்
ஆரிவன் ஆண்மை அளவிடுவார்.

மேற்குறிப்பிட்ட பாடல்கள் கட்டைபொம்மன், ஊமைத்துரை ஆகியோர் வரலாற்றை இனிது இயம்பும் கதைப் பாட்டுக்களாகும். 'என்னடா என்னடா கட்டபொம்மா எப்போது பார்த்தாலும் கத்திச் சண்டை' என்பது புகழ் வாய்ந்த பாட்டு

இந்திய வரலாற்றில் அவ்வப்போது பஞ்சங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றில் மிகக் குறிப்பிடத்தக்கக் கொடுமையான பஞ்சம் 1876 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சமாகும். இது தாது ஆண்டில் ஏற்பட்டதால் தாது வருடப் பஞ்சம் என்னும் பெயர் பெற்றது. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரியும் பொருட்டு அரசினர் தொட்டிகளில் கஞ்சி வார்த்தனர். எனவே, இப்பஞ்சம் கஞ்சித் தொட்டிப் பஞ்சம் என வழங்கலாயிற்று. இப்பஞ்ச நிவாரணப் பணிக்கு அன்றைய அரசினர் பதினாறு கோடி ரூபாய் செலவு செய்தனர் என்று கணக்கிடப் படுகின்றது. இப்பெரும் பஞ்சத்தில் அடிபட்ட மக்களின் வேதனைக்குரல் அவலச்சுவை பொருந்திய நாட்டுப் பாடலாக உருவாயிற்று. சான்றுக்காக ஒரு பாடலை மட்டும் பார்ப்போம்.

தாது வருஷப் பஞ்சத்திலே — ஓ சாமியே
தாய் வேறே பிள்ளைவேறே — ஓ சாமியே
காட்டுப் பக்கம் நூறுபிணம் — ஓ சாமியே
வீட்டுப் பக்கம் நூறுபிணம் — ஓ சாமியே
ரோட்டுப் பக்கம் நூறுபிணம் — ஓ சாமியே
மேட்டுப் பக்கம் நூறுபிணம் — ஓ சாமியே
தண்ணித் தாகத்தால் வறண்டு — ஓ சாமியே
தவறினது கோடி சனம் — ஓ சாமியே
கஞ்சியில்லாமே தவித்து — ஓ சாமியே
காட்டிலே மாண்டது கோடி — ஓ சாமியே
கஞ்சித் தொட்டி போட்டார்களே — ஓ சாமியே
அன்புடனே சலுக்கார்தானே — ஓ சாமியே
(சலுக்கார் — சர்க்கார்)

இது போன்ற நாடோடிப் பாடல் மக்கள் இலக்கியமாகத் திகழ்வதுடன் வரலாற்று உண்மைகளைத் தெளிவு படுத்தும் வரலாற்றுச் சான்ருகவும் விளங்குவதைக் காணலாம்.

கதைப் பாட்டின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கதைப் பாட்டுக் கவிதைகள் (Lyrical ballads) இயற்றிய ஆங்கிலக் கவிஞர்களும் உண்டு. இவ்வகைக் கவிஞர்களில் வர்ட்ஸ்வர்த் (Wordsworth), லாங்பெல்லோ (Longfellow), ரொசெட்டி (Rosetti), ஸ்வின்பர்ன் (Swinburn) ஹௌஸ்மன் (Houseman), ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மனிதன் இறந்தபோது அவன் உற்ருரும் உறவினரும் சூழ்ந்து அழுது புலம்பிக் கொண்டே பாடுகின்ற அவலப்பாட்டு ஒப்பாரியாகக் காட்சியளிக்கின்றது. இதனை இலக்கிய மொழியில் இரங்கற்பா என்றும் கையறம் என்றும் குறிப்பிடுவர். கணவனை இழந்த ஒருத்தி தன் மனக்குறையைச் சொல்லிப் புலம்பி அழும்போது அவலச்சுவை ததும்பி நம் எல்லோருடைய உள்ளத்தையும் உருக்குகின்ற ஒப்பாரியாகக் காட்சியளிக்கின்றது. இதோ அவளது வேதனைக் குரல். —

மல்லிகைப்பூ மெத்தையிலே
மாதங்கூடத் தூங்க லையே
மாமியாள் கொடுமையினல்
மைந்தனில்லாப் பாவியானேன்.

போர்க்களத்தில் இறந்த தன் கணவனை நினைத்து அழுகின்றாள் ஒருத்தி. அவள் துயரக் குரல் ஒப்பாரியாக அமைகின்றது. இதோ அவள் பாடுகின்ற அவலப் பாட்டு. —

குளத்தங்கரையோரம் நான் — ஒரு
குயிலுன்னு நிக்கையிலே — என்னை
குயிலுன்னு பாராமே — என்னைக்
குண்டாலே எய்தார்கள்
ஆத்தங் கரையோரம் — நான்
அன்னம் போல நிக்கையிலே
அன்னமின்னு பாராமே — ஒரு
அம்பாலே எய்தார்கள்.

கைம்பெண் சமுதாயத்தில் எவ்வளவு கொடுமையாக நடத்தப்பட்டாள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. கைம்மையின் துயரத்தை உள்ளத்தால் உணர முடியுமே தவிரச் சொற்களால் சொல்லவோ எழுதவோ முடியாது கைம்மையின் கொடுந் துயரத்தைப் பின் வரும் பாடல் தெரிவிக்கின்றது. —

கும்பத்துப் பால் கொண்டு கூவாத சாவல் கொண்டு
கோயநதி போனாலும் கோய நதிப் பாப்பாரு
கொடுமை பெருத்த கொடுமையா வாரா
கோயிலைச் சாத்தி கொக்கிரெண்டும் போடுமென்பார்.

சுருங்கக் கூறுமிடத்து மனிதன் தாலாட்டுப் பாடலுடன் பிறக்கின்றான். பல்வேறு பாடல்களிடையே வளர்கின்றான். ஒப்பாரியுடன் சாகின்றான். தாலாட்டு முதல் ஒப்பாரி வரை மனித வாழ்க்கை பாட்டு மயமாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

மக்கள் இலக்கியம் எங்கெங்கு எவ்வெவ்வாறு தோன்றி வாழ்கின்றது என்பதை மிகத் தெளிவாகத் தொகுத்துரைக்கின்றார். பாரதியார். இதோ அப்பாடல். —

ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்பிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்புகளிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினுலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்
(குயிற் பாட்டு 55 — 44)

நாட்டுப் பாடல் யாவும் சந்த இன்பம் பெற்றவை. அவற்றின் இசை நயத்தை உணர்ந்த தமிழ்ப் புலவர்கள் அவற்றின் சந்தத்தைத் தம் பாடல்களில் கையாண்டுள்ளனர். நாடோடிப் பாடல்களில் வெள்ளைக்காரனுடைய வெள்ளிப்பணம், அது பண்ணிய வேடிக்கை, மாடில்லாமல் ஓடும் ரயில், பூமி கிடு கிடு என்று நடுங்குமாறு பறந்து செல்லும் ஆகாய விமானம் முதலிய பல்வேறு குறிப்புக்கள் இடம் பெறுகின்றன.

சிலப்பதிகார நீர்ப்படைக் காதையில் இளங்கோ அடிகள் குறிப்பிட்டுள்ள குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணி (குறிஞ்சி) உழவர் பாடிய ஓதைப் பாணி (மருதம்) கழங்கு ஆடு மகளிர் பாடிய அந்நீம் பாணி (நெய்தல்) முதலியவை நாடோடிப் பாடல்களின் தொன்மையைப் புலப்படுத்துகின்றன. நாடோடி இலக்கியத்தின் பெரும் பகுதியாகிய நாடோடிப் பாடல்களைச் சுருக்கமாகப் பார்த்தோம்.

முடிவுரை.

நாடோடி இலக்கியம் யாவும் பொது மக்களின் எண்ணம் விருப்பம், நம்பிக்கை, கனவு, நோக்கம், கற்பனைவளம், வாழ்க்கை நெறி பண்பாடு, கவித்திறன் காதல், வீரம், பழக்க வழக்கம், சமுதாய உறவு, சமுதாய அமைப்பு, சடங்கு முதலியவற்றைத் தெளிவாக நயம்பட இனிது விளக்குகின்றன. புலவர் இலக்கியத்தையும் மக்கள் இலக்கியத்தையும் விருப்பு வெறுப்பின்றி ஒப்பிட்டு ஆராய்ந்தால்புலவர் இலக்கியத்திற்குள்ள தகுதியும் சிறப்பும் மக்கள் இலக்கியத்திற்கும் உண்டு என்பதை மிகத் தெளிவாக அறியலாம்.

ஒரு மங்கையின் அழகைச்
சுவரில் எழுதலாம் சித்திரம் போல் பார்க்கலாம்
படத்தில் எழுதலாம் பதுமைபோல் பார்க்கலாம்

என்று இரண்டே அடியில் கவிதைச் சுவையும் கற்பனை நயமும் ததும்ப எடுத்தியம்புகின்றது ஒரு நாட்டுப் பாடல். இப்பாட்டில் கவிதைக்குரிய உயிர்த் துடிப்பு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. எதுகை, மோனை, இயைபு முதலிய யாப்பு அமைதிகளைப் பெற்று கவிதைகளாகத் திகழ்கின்றன நாட்டுப் பாடல்கள். கவிஞர் யாத்த கவிதைகள் பெரும்பாலும் உயர் நடையில் அமைந்திருக்கின்றன. ஆனால் பாமர மக்களின் நாட்டுப் பாடல்கள் யாவும் எளிய நடையில் அமைந்துள்ளன. நடையைப் பொருத்த வரை கவிஞர் இலக்கியத்துக்கும் பாமரர் இலக்கியத்துக்குமுள்ள வேறுபாடு இது ஒன்றுதான். நாட்டுப் பாடல்களில் இடம் பெற்றுள்ள சொற்கள் யாவும் மிகவும் எளிய சொற்கள். அச்சொற்கள் யாவும் உலக வழக்கில் — பேச்சு வழக்கில் உள்ளவை. சில சொற்கள் கொச்சையாகவும் இருக்கும். நாட்டுப் பாடலின் பொருளைப் புரிந்து கொள்ள அகராதியோ நிகண்டோ தேவையில்லை. பத்துப் பாட்டு முதலிய ஏட்டிலியக்கியத்திற்கு உரை தேவைப்படுவது போல் நாட்டுப் பாடலுக்கு உரை தேவை இல்லை நாட்டுப் பாடலே தெளிவுரையாகத்தான் இருக்கும்

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் நன்ருகவும் முழுமையாகவும் அறிந்துகொள்ளப் பயன்படுவது மக்கள் இலக்கியமே. மானிடயியலாரின் சமுதாய ஆராய்ச்சிக்கு நாடோடி இலக்கியம் மூலக்கருவாக இருக்கின்றது. வாய்மொழி இலக்கியமே மக்கள் வாழ்க்கையைக் காட்டுகின்ற உண்மையான கண்ணாடி. வாய்மொழி இலக்கியமே உயிர் இலக்கியம் தமிழ் மொழியிலுள்ள நாட்டுப் பாடல்களில் பெரிதும் ஈடுபட்டு ஆராய்ந்த அறிஞர் பெருமக்களுள் கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா, சகந்நாதன். ஆராய்ச்சிஏடு — ஆசிரியர் திரு. நா. வானமாமலை, பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், இலங்கை வட்டுக் கோட்டை மக்கள் கவிமணி மு. இராமலிங்கம். நாடகக்கலை (ஏடு) சிறப்பாசிரியர் திரு. ஆறுஅழகப்பன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வாழ்க மக்கள் இலக்கியம், முழங்குக நாட்டுப் பாடல்.

திராவிட மொழிக் குழு

டாக்டர். சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இன்றைய உலகில் ஏறத்தாழ இரண்டாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. இம் மொழிகளில் காணப்படும் ஒலியமைப்பு, சொல்—பொருள் ஒற்றுமை, இலக்கண அமைதி முதலிய பொதுத் தன்மைகளை ஆதாரமாகக் கொண்டு மொழி நூல் அறிஞர் இவற்றைச் சில குழுக்களில் அடக்கியுள்ளனர். இந்தியாவில் வழங்கும் மொழிகளை முப்பெரும் பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். அவையாவன :

1. முண்டா மொழிக் குழு (The Munda or Kolarian Family)
2. திராவிட மொழிக் குழு (Dravidian Family)
3. ஆரிய மொழிக் குழு (Indo - Aryan Family)

இவற்றுள் முன்னிரு குழுக்களும் ஆரியர் வருகைக்கு முன்பே இந்திய மக்களால் பேசப்பட்டு வருவன. இம் மூன்றில் திராவிட மொழிக் குழு இன்றியமையா இடத்தைப் பெறுகிறது. பேராசிரியர் பர்ரோ, திராவிட மொழிகளின் செல்வாக்கு வட மொழியில் மிகுதியும் காணப்படுவதால், திராவிட மொழிகள் முக்கியத்துவம் பெறுகின்றன என்கிறார். ★

'திராவிடம்' என்ற சொல் தமிழைக் குறிப்பதற்கு வட மொழிவாணர் வழங்கியதாகும். சைமினியின் மீமாஞ்ச சூத்திரத்திற்கு உரைகண்ட குமரிலபட்டர், 'ஆந்திர திராவிட பாஷா' எனத் தெலுங்கையும் தமிழையும் சுட்டினர். ஆதிசங்கரர் திருஞானசம்பந்தரைத் " திராவிட சிசு (தமிழ்க் குழந்தை) எனத் தம் சௌந்தர்ய லஹரியில் புகழ்கிறார். நம்மாழ்வாரின் திருவாய் மொழியினைத் 'த்ரமிடோபநிஷத்' என்றே வேதாந்த தேசிகர் குறித்தார் தாயுமானவர்.

★ "The Dravidian languages are the most important not only numerically and culturally, but also from the point of view of their influence on Sanskrit".
(Collected papers on Dravidian Linguistics, Page 291.)

'வடமொழியிலே, வல்லான் ஒருத்தன் வரவும் திராவிடத் திலே வந்ததாய் விவகரிப்பேன்'

என்று பாடுகிருர். எனினும், மகாபாரதத்திலும் மனுஸ்மிருதியிலும் தென்னுடு 'த்ரமிடம்' (திராவிடம்) எனக் குறிக்கப்படுகிறது. தமிழ், மலேயாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய ஓரின மொழிகளைச் சுட்டுதற்கு ஒரு பொதுச் சொல் தேவைப்பட்ட பொழுது டாக்டர் கால்டுவெல் 'திராவிட மொழிக் குடும்பம்' (Family of Dravidian Languages) என்ற தொடரைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தார்.

கால்டுவெல்தான் திராவிடமொழி ஆராய்ச்சிக்குத் தந்தை. அவர் பன்னிரு மொழிகளைத்தான் திராவிடக் குழுவில் அமைத்துக் காட்டிஞர். அவை,

1. திருந்திய திராவிட மொழிகள்:

1. தமிழ், 2. மலேயாளம், 3. தெலுங்கு
4. கன்னடம், 5. துளு, 6. குடகு

2. திருந்தாத் திராவிட மொழிகள்:

1. துட (Tuda) 2. கோட (Kota)
3. கோண்டு (Gond) 4. கூ (Ku or Khond)
5. ஒரேஆன் (Oraon)
6. ராஜ்மகால் (Rajmahal)

இம்மொழிகள் யாவும் மிகப் பழங்காலத்தில் இருந்த ஒரு மூல மொழியினின்றும் வெவ்வேறு காலங்களில் கிளைத்தவை. அம் மூல மொழியைத் 'தாய் திராவிடம்' அல்லது 'மூலத் திராவிடம்' (Proto-Dravidian) என வழங்குவர்.

கால்டுவெல் காலத்திற்குப்பின் திராவிட மொழி ஆராய்ச்சி வளர்ந்து வருகிறது. ஸ்டென்கோநவ், பிட்சரால்டு, டிரெஞ்சு வின்பீல்டு, பிரே, எல். வி. ராமசாமி அய்யர் எமனெள, பர்ரோ, பட்டாசார்யா முதலிய பேரறிஞர் பலர் இருபதுக்கும் மேற்பட்ட திராவிடமொழிகள் இந்தியத்துணைக் கண்டத்தில் பேசப்படுகின்றன என்பதைச் சான்றுகாட்டி நிறுவியுள்ளார். இவற்றைத் தென் திராவிடம். நடுத்திராவிடம், வடதிராவிடம் எனப்பகுத்து ஆய்ந்து வருகின்றனர். இப் பகுப்பு முறை, இம்மொழிகள் வழங்கும் இடத்தை அடிப்படையாகக் கொண்டது. இம்மொழிகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் காண்போம்.

1. தென் திராவிடம் :

1. தமிழ் 2. மலையாளம் 3. கன்னடம் 4. துளு
5. தோடா 6. கோடா 7. குடகு 8. படகர்மொழி.

இவற்றுள் தோடா, கோடா, படகர் முதலிய மொழிகள் நீல கிரி மாவட்டத்தில் பேசப்படுகின்றன. குடகு மைசூரின் ஒரு பகுதியிலும் துளு மங்களூர் பகுதியிலும் பேசப்படுகின்றன. திராவிட மொழிகளில் தொன்மையும் இலக்கிய வளமையும், இலக்கண அமைதியும் செறிந்த உயர்தனிச் செம்மொழி தமிழே யாகும். இம்மொழி தமிழகத்திலும் இலங்கையிலும். மலேசியா பிஜி, தென் ஆப்பிரிக்கா முதலிய தமிழர்வாழ் பகுதிகளிலும் பேசப்படுகின்றது. மலையாளம் கேரளாவிலும், கன்னடம் மைசூர் மாநிலத்திலும் பேசப்படுவன. தமிழிற்கு அடுத்த நிலை யில் கன்னடம் இலக்கியவளம் நிரம்பியமொழியாய்த் திகழ்கிறது.

2. நடுத் திராவிடம் :

இப்பிரிவில் 11 மொழிகள் உள்ளன.
1. தெலுங்கு, 2. கோண்டி (Gondi) 3. கொண்டா (Konda) 4. குயி (Kui) 5 குவி (Kuvi)
6. பென்கோ (Pengo) 7. மண்டா (Munda)
8. கோலாமி (Kolami) 9. நைகிரி (Naikiri)
10. பர்ஜி (Parji) 11. கட்பா (Gadba)

இவையாவும் ஆந்திரப் பகுதியிலும் ஐதராபாத், மத்தியபிரதே சம் முதலிய இடங்களிலும் பேசப்படுவனவாகும்.

3. வட திராவிடம் :

இப் பிரிவில் மூன்று மொழிகள் உள்ளன.
1. குருக் அல்லது ஒரேஆன் (Kurukh or Oraon)
2. மால்டோ அல்லது ராஜ்மகால் (Malto or Rajmahal)
3. பிராகுயி (Brahui)

இவற்றுள், முதலிரு மொழிகளும் வங்காளம், ஒரிசா முதலிய இடங்களில் பேசப்படுகின்றன. 'பிராகுயி' பலுச்சிஸ்தானத் தில் பேசப்படுகிறது.

எனவே இமயம் முதல் ஈழம் வரை திராவிட மொழிகள் வழங்குகின்றன என்ற உணர்ச்சி நமக்கு இன்பம் பயக்கும் என்பது உறுதி.

தமிழ்த் தெய்வம்

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ. பி. எல்., தஞ்சை.

ஊனுடம்பெடுத்த உயிர்கட்குத் தெய்வம் பொதுவாதல் பற்றி, ஆசிரியர் தொல்காப்பியர் அதனையே முதன்மையாகக் கருதி, ஏனைய பொருள்களுக்கெல்லாம் முன்னிறுத்தி

'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதி யொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப, எனக்

கூறுவாராயினர். இதனைத் தழுவி. வாழும் மக்களுயிர்கட்கு அவரவர் தாய்மொழியே. ஊன், உயிர் எனக்கொண்டு, மனோன் மணீயத்து ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமது காவிய நாடகத்து வாழ்த்தில் தமிழ் தெய்வத்தை வழுத்தி இன்புற்று மகிழ்ந்தார் தமிழ் மொழியை கண்கண்ட தெய்வமாக வழி படுவது தமிழரது இயல்பு. வேறெம்மொழியினரும் இவ்வகை யாக தங்கள் மொழியை தெய்வமாகக்கொண்டு உள் நினைந்து இதுகாறும் போற்றவில்லை. 'தமிழோடிசையானவன்,' 'முத் தமிழும் ஆனான் கண்டாய்' என்ற, சைவ சமயத் தெய்வகுரவ ராயு சொற்கோவின் வாய்மொழிகள் இங்கு சற்றே நினை கூரற் பாலது.

ஆசிரியரது செவ்வறிவு நாடகம் அவர் தம் சீரிய சிந்தனை யின் அழகினையும். அறிவின் ஆற்றலையும் புலப்படுத்தி, நனி நாகரீக உணர்வாட்சியுடைய நல்லறிஞர் பல்லோரது பாராட் டலுக்கு உரித்தாயிற்று. அவர் உள்ளத்தினின்று பாயும் உயர் கவிதை மொழியாலே. தமிழ்த் தெய்வத்தை மிகு காதலுடன் நீர்மையும் சீர்மையுங் கெடாது வழிபடும் சீராளர் யாவருக் கும் கட்டுப்படாது அவர், மனமலர்ச்சியோடு சுதந்திரமாகப் பாடும் ஓர் சிறந்த கலைப்பண்பும் கற்பனைத் திறனுமுடையவர் : தாய்மொழியிலல்லாது பிறமொழிகள் பாலும் பற்றுள்ளம் கொண்ட ஞானப் பயிற்சியாளர் தமிழின் பழம் பெருமைக்குச் சான்ருக, நாடக காவியத்தை, இவர் பொருள்வளம் சொல் நயம் சிறக்கவும் அமைத்து தமிழ்மொழிப் பற்றுக்குக் குரல் கொடுத்தவர். இவரது தமிழ்த் தெய்வ வணக்கம், மனோன் மணீய நாடக காவியத்திற்கு வாயில் முகப்பு மணி மண்டப மாகத் திகழ்ந்து இலக்கியவானின் உச்சிமுகட்டையினைத்

தொடும் மாட்சியையும் ஆட்சியையும் உடையது மனோன் மணீயத்தை தமிழ் வாழ்த்து வணக்கத்துடன் புத்தப் புதிய முறையில் புலமைக் கலையோடு தொடங்கித் தமிழ் மொழிக்கு நிரந்தரமாயுள்ள சிறப்பு உண்மைகளையும், சீரிய இயல்புகளை யும் ஆசிரியர் மொழிந்துள்ளது ஒரு முறை, மேற் போக்காக காணலுறுவாரும் தெளிந்து கொள்வார் தமிழன்னை வாழ்த்து நாடகக் காவியத்தில் தெய்வ மாட்சியுடைய தனி நூலாகவும் இயங்குவது நன்கினிது புலப்படும். ஆசிரியர்,

இந் நாடகம்
வெள்ளிய தெளினும் விளங்கு நின்கணைக்காற்கு
ஒள்ளிய சிறுவிரலெணியாக்
கோண்மதி

எனக் கூறினும், இது போன்று இன்றுவரை ஏதொன்றும் தோன்றுமையால், மனோன்மணீய வாழ்த்து, தமிழ்த் தெய்வத் திற்கு, மெய்ஞ்ஞானக் கல்வியின் விழுப்பத்தால் சூட்டப்பட்ட ஓர் பாமாலையாக விளங்குதலென்பது சற்றும் ஐயுறவின்றித் துணிந்து கொள்ளப்படும்.

ஆசிரியர் சுந்தரர் தம் அகக் கண்ணுல் கண்ட தமிழ்த் தெய் வத்தின் காட்சி, கவிதையாக உருவெடுத்து அப்படியே மகிழ்ச் சியின் பொங்கலாக மலர்ந்துள்ளது. நீர் நிறைந்த நீலக்கட லாடையுடுத்த நில மடந்தையைக் கண்டார். அவருக்கு பரத கண்டம் சிறந்த வதனமெனத் தென்பட்டது. அவ்வதனத்திற் கேற்ப அமைந்த பிறைநுதல் போன்ற சிறு நெற்றி, தக்கண மாக வாய்ந்துள்ளதும், நெற்றியின் நடுவண் நறுமணங்கம ழும் திலகம் தமிழகமென்றும், அத்திலக வாசனை போன்ற தமிழ் மொழி எத்திசையும் புகழ் மணக்கப் பரந்து நின்றதென்பதை யும் உணர்ந்து வணங்கி பெருமகிழ்வுற்ருர்.

'நீராருங்கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே!

ஆசிரியர், பின்னர், தமிழ்மொழி மூவாத இனிமை, கோதின்மை, செம்மை, தண்மை, நன்மை, நறுமை, நெடுமை,

பெருமை முதலிய புகலரியதாய பண்புகள் மலியப் பெற்றுள்ளதைக் கண்டு இறும்பூதெய்தி செயல் மறந்து வாழ்த்தவும் தலைப்பட்டார். தமிழைப் போன்ற பழமையுடைய, ஆரியம், கிரேக்கு, லத்தீன் போன்ற அயல் மொழிகள், மக்கள்பால் மாண்புறுதிருந்த நிலையினை ஓர்ந்தார். அமிழ்தினுமினிய தமிழ் மொழியிலிருந்து, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற பல மொழிகள் வழி மொழியாய் மக்களிடம் விளங்கியதைக் கண்ணுரக் கண்டு, கன்னித் தமிழின் இளமைத் திறத்துச் சிறப்பினையும் அதன் வலிவுத் திண்மையினையும் கணித்தார். பின்னர் தமிழ் மொழிக்கு எதனை ஏற்ற ஒப்புமைக் கூறலாமெனக் கூர்ந்து சிந்தித்துப் பழமை தங்கியத் தமிழோடு தோன்றிய ஆரியமொழி யினியல்பையும் கருதினர். அது மனம் சற்று அயர்வுற்றிருக்குங்காலை, இன்பம் தந்து, அதனைத் தன் வயமாக்கி நிற்கும் தமிழோசை போலல்லாது, மனமும், செவியும் அறுவறுப்பு கொள்ளும் வண்ணம், கனத்த ஓசையும் உரத்த ஒலியும் கொண்ட தோடமையாது பொருந்தா இலக்கண முடிபும் உடையதாதலின், உலக வழக்கு அழிந்து ஒழிநது சிதைந்து நிற்கும் நிலையினைக் கண்டு மனம் புழுங்கினர் தமிழைப் போன்ற இறவாத இளமைத் திறம், பல்லுலகையும் பல்லுயிரையும் படைத்துக் காத்து, இருந்த படியிருக்கும் பரம் பொருளிடமிருப்பதை ஞான முகமாகக்கண்டு வியந்தும், மெய் வகை யுணர்ந்தும், தமிழ்த் தெய்வத்தைப் பரம் பொருளாகவும், பரம் பொருளைத் தமிழ்த் தெய்வமாகவும் விதந்து துதித்து மன மலர்ந்தார். மனம் பூத்த மலரில்,

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும், துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே

என்ற ஓர் அருமையாய கவிதை முகிழ்ந்தெழுந்தது

தமிழ் மொழியின் கடலன்ன இலக்கண இலக்கியப் பரப்பையுணர்ந்து, தமிழென்னும் அளப்பருஞ்சலதியினை எவரும் முடிவுறக் கண்டாரில்லை யாதலின், தமிழை கடலுக்கு ஒப்புமை கூற ஒருப்படாததென ஆய்ந்து, கடலைக்குடித்த அகத்திய முனிவனும் தமிழைக் கற்க அரியதாயிற்றென்றும். அதனன் அம் முனிபுங் கவனும் தென்னுடு போந்து சிவனரது முருகனருளால்

செந்தமிழ்ப் புலமையினையும் பெற்றதையும் அறிந்து கடலை தமிழுக்கு உவமையாகக் கூறுவது பயனின்மையென்ற முடிபுக்கு சுந்தரர் வந்தார்.

> கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
> தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே.

தமிழ் இலக்கணத்தின் அருமையினையும் பெருமையினையும் அற்புதத்தையும் பெருமித வளத்தையும் சுந்தரர் வியக்குங்காலை, இறைவன் கவிக்கு குற்றம் கற்பித்த நற்றமிழ் கீரரையும். அவரது வினவிற்கு விடை பகராது அவை நடுவே, உரையிழந்து விழித்த சிவனுரையும் பற்றிய வரலாற்றினை நெடிது நினைத்து

> ஒருபிழைக்கா அரனுர் முன் னுரையிழந்து விழிப்பாரேல்
> அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே.

என நெஞ்சங் கரைந்து எடுத்திசைத்தனர்.

தெய்வத் தமிழ் மொழி ஆரியம் வருமுன் பழங்காலத்தே ஞாலம் அளந்த மேன்மையையும், பேருண்மையையும் ஆய்ந்து ஆசிரியர் இறும்பூதெய்தினுர்.

> 'சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
> முதுமொழி நீ யனுதியென மொழிகுவதும் வியப்பாமே'

என்று முளதென்றமிழும் பின்னொரு காலத்தில் ஆரிய மயமாய் உருத்தெரியாது ஆரியம் போல் உலக வழக்கொழிந்து புறக்கணிக்கப்படுமோ என ஆசிரியர் அயிர்த்தார். மின்னென அவர் மனத்தில் வைகையின் வெள்ளப்பெருக்கில் எதிரேறிச் சென்ற ஏட்டின் நினைவு அவர் தம் மனவெளியிலே விழிப் புணர்ச்சியோடு தோன்றியது தோன்றவே, கால வெள்ளத்திலும் தமிழ் அழிவின்றி நிற்தம் பேருண்மைக்கு இது ஓர் தக்க அடையாளமாகுதலை,

> வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
> கால்நதி நினைக்கரவாக் காரணத்தி னறிகுறியே.

எனக் கூறி அகமகிழ்வாராயினர்.

பரனுகிய சிவனுர் போன்று, தமிழுக்கு அழிவில்லை என்ற உண்மையினைத் தேர்ந்த ஞான்று, ஊழிக் காலத்தியல்பின் தன்மை, சுந்தரர் மனத்தை நண்ணியது. யாவும் அழிவுறும் ஊழிக்காலத்தில், தனித்திருக்கும் சிவனுர், திருவாசகத்தின்படி

யெடுத்து அதனைப் படித்து ஊழிக் காலத்தைக் கழிக்கும் பான்மையினை அறிந்து ஊழிக் காலத்திலும் சிவனோடு திருவாசகத் தெய்வத் தமிழும் உடனிருக்கும் வகையினை உள்ளூர உணர்ந்து ஆனந்த மேலீட்டால்

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றே அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தி லொருபிரதி கருதினதே

எனத் தெளிவடைந்தார்.

சங்கப் பலகை போன்று தமிழும் தக்கவழி விரிந்திலகும் பான்மையினைக் கருதி ஆசிரியர்,

தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே

எனும் தாழிசையில் தகவுடன் திட்பம் கொண்டு இன்பம் துளிர்த்து நெஞ்சம் தழைத்தார்.

வடமொழி தென்மொழி ஆகிய இவ்விரண்டினுள் எது சிறந்ததென்ற உண்மையினைத் திரட்டித் தேர்ந்து கொள்ள, அவ்வவ்மொழிப் பயிற்சியாளரிடமே விடுத்து சுந்தரர் வெகு சாதுரியமாய சதுரப்பாட்டால், அவரவர் நிலையே அவரவர்கட்கு அமையுமென தருக்கமுறை வாயிலாக பின் வருமாறு கவினுற நளினமாக நவின்றுள்ளார்.

வடமொழி தென்மொழியெனவே வந்தவிரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடு மேற்குணராரே

வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியானால்
கூறுவட மொழிவலமாக் கொள்வர் குணதிசையறியார்

கலைமகள்தன் பூர்வதிசை காணுங்கா லவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார்.

பின்னர், மனம் தேறுதலடைந்து, தமிழின் அழகில் நன்மை இசையுற அமைந்திருப்பதைப் புலப்படுத்த பத்துப்பாட்டில் சுந்தரர் மனம் ஈடுபடவே, புலவர்களையும், கல்வியறிவுடையாரையும், பொருளுக்குப் பொருத்தமில்லாத கற்பனைகளில் மயங்காதவாறும், இயற்கை நவிற்சியை மேற்கொள்ளாது விடுத்து, புனைந்துரையாகிய உயர்வு நவிற்சியில் அறிவைச் செலுத்தாதவாறும் ஆசிரியர் பத்துப் பாட்டு முதலிய சங்கத் தமிழ் இலக்கியங்களைக் கற்றுணருமாறு ஆற்றுப்படுத்த ஆர்வமும் விழைவுங் கொண்டு

பத்துப்பாட் டாதிமனம் பற்றிஞர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே

என மொழிந்துள்ளார்.

'யாதும் ஊரே யாவருங்கேளிர்' எனக் காணும் மங்கல நினைவின் அடிப்படையிலெழுந்து உலகப் பொது மறையாக தமிழ் மொழியில் விளங்கும் வள்ளுவர் குறளை கசடறக் கல்லாமையான், ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுக்கும் மனுநீதி முறை ஓங்கவே, அதனுல் உலகில் ஓங்கலுறும் சாதி சமயக் காழ்ப்புகளையும் சச்சரவுகளையும் நீக்கி. இலக்கிய அமைதியினை நிலை நாட்ட வேண்டி,

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி.

என தீது செறுக்கும் அறிவுரையினைப் பேராசிரியர் வழங்கியுள்ளார்.

அறிவு நூலாகிய குறளை மறுவற உணரவேண்டுமெனக் கூறிய சுந்தரர், கருங்கல் மனத்தை இளகச் செய்து கரைத்தும், மும்மலங்களையும் கெடுக்கும் அன்பு நூலாகிய திருவாசகச் சுவையில் மனமுருக ஈடுபடின், இறைவன் அண்ணித்து அருள்புரிய நிற்பானென அழகாக நுவன்றுள்ளார். மற்றும் வேதங்கள் ஐயா! என அரற்றியும், அவற்றிற்கு அகப்படாத ஆழ்ந்தகன்ற நுண்ணியன் எவ்வண்ணம் கண் மூடித்தனமாய், நான்கு வகைப்பட வேதம் ஓதும் கனபாடிகளுக்கும் (கனம்) ஜடா வல்லபர்களுக்கும் (சடை) முற்படுவனென வியந்தார்.

மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.

மற்றும், நூல் முகத்து கடவுள் வணக்கத்து நேரிசை வெண்பாவில்,

'வேத சிகையும் விரிதலையும் மெய்யன்பர்
போதமும் போய்த்தீண்டாப் பூரணமே'

என ஆசிரியர் போற்றுவது ஈண்டு உன்னற்பாலது.

அமிழ்தாம் இயல்பும் அதனுல் அழியா வாழ்வும் கொண்ட தமிழின் பெருமையினையும், அதற்கமைந்த மாட்சியினையும், படிப்போர்க்கு மனவெழுச்சியினை உண்டாகும்படி எடுத்துக்

கிளத்தல் மாசற்ற தமிழ் தெய்வ வாழ்த்தின் கருப்பொருளாகும் தமிழருக்குத் தமிழ் மாண்பைப் பெருந்தகைமையோடும் பறை. சாற்றித் தெளிவு காட்டும் பெற்றியினை உணராது, பேராசிரியர் சுந்தரர் தமிழணங்கைத் தெய்வமாக வைத்துப் போற்றும் போது வடமொழிக்கு ஒப்புமை காட்டும் முகத்தால் ‘ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா’ என்ற அடியை வைத்துக்கொண்டு ஏதோ வடமொழியைப்பற்றி இழித்துக் கூறப் பட்டுள்ளதினால், வாழ்த்தில் மறு ஏற்பட, வாழ்த்துக்கே குறையும் கறையும் படிந்துள்ளதென்றும், வடமொழியை தமிழ் வாழ்த்தில் பேராசிரியர் சாடியது சார்பிலதென்றும் கூறுவாருமுளர். ஈண்டு பேராசிரியர் எவ்வகையிலும் சாடுதலும் தூற்றிப்பழித்தலுமில்லாது, நல்லதைப் போற்றி அல்லதை அச்சமின்றி உண்மைகாணும் நோக்கோடு எடுத்துக்கூறுவதில் தவறு எங்குளது? இதுபோன்ற நாடகக் காவிய மாளிகையை அமைக்க வகையின்றி, கட்டிய மாளிகைக்கு வக்கணை கூறுவதும் எளிது.

வண்டமிழ்த் தெய்வ வாழ்த்து வணக்கம் வழங்கியகாலத்தும் சுந்தரர், வடமொழியினைப் பழித்தும் தாழ்த்தியும் செய்யாது அவற்றை சமநிலை யெனும் ஞானவுணர்வின் மேல்வைத்து ‘வட மொழி தென்மொழி யெனவே வந்த இருவிழி’ எனக் கூறியது அவர்தம் வடமொழியின் பாலுள்ள அன்பிற்குரிய உறவினையும், அறிவிற்குகந்த முறையில் உவந்தேத்தும் விருப்பினையும் எடுத்துக்காட்டா நிற்கும். இதனால் வடமொழிபால், அவரது வெறுப்பும் பகைமையும் வேற்றுமையும் பாராட்டாத தமிழ்ப் பண்பும் புலனாகுதலும் காண்க. ஆரியத்தைத் தூற்றித் தமிழைப் போற்றும் மதம் அவர்க்குத் தினையளவு கூட இல்லை. அவர் வட மொழி தென் மொழிகளுக்குடைய இயற்கை இயல்களுக்கு மாறுபட யாதொன்றும் கூறவில்லை.

பேராசிரியர். தமிழ் வாழ்த்தில் ஆரியத்தைத் தாழ்த்தி வெறுப்பு உணர்ச்சியினை உதறுகிறபாவனையில், யாதனையினை மூட்டியுள்ளாரென்பது சிறிதும் ஏற்றுக் கோடற்பாலதன்று, சுந்தரர், களி துளும்ப, தமிழ்த் தெய்வத்தை வணங்கும் முகத்தால், வாழ்த்துரை கிளக்கும்போதும், ஆரிய முறையினைத் தழுவும் கருத்துக்களை கொண்டவராயுள்ளார். நான்முகன் முதற் படைப்பு நீரேயாமென்பது இருக்கு வேத மெய்ந்நூல் வழக்கு. அவ் வழக்கினைப் பின்பற்றி. தமிழ்த் தெய்வத்தின் வாழ்த்து வணக்கத்திலும் ‘நீர்’ எனும் மொழியால் தொடங்கப்பட்டது

காண்க. இதனுன் வேதநூல் நுவலுங் கொள்கை இவருக்கு உடன்பாடே யாமென்பது ஏற்கற்பாற்று.

சுந்தரர் தமது நூலிடையே மன்மதோபாலம்பனம். கேசாதிபாத வருணனை போன்ற வடமொழிக் காவிய மரபை யொட்டிய உரிமைக் கூறுகளைப் பின்பற்றுகிருர்: வேதாந்த கருத்துக்களையும் பளிச்சிடும் வகையில் ஆங்காங்கே பெய்திருக் கிருர்: தமிழில் திரிந்து வழங்கும் ஆரியச் சொற்களையும் எடுத் தாண்டுள்ளார் வடமொழிப் புலவராய காளிதாசரது நுண் கருத்துரைகளை வியத்தகு முறையில் அடியொற்றி நம் நூலின் கண் வைப்பிட மறிந்து வைத்து வழங்கியுள்ளார்.

தாயே வந்துபார், நீயே வளர்த்த
முல்லையும் நறுமுகை முகிழ்த்தது. வல்லே
காதலிற் கவிழ்வை போலும்
(முதல் அங்கம்: இரண்டாம் களம்)

என காளிதாசருடைய சாகுந்தலத்திலிருந்து காவிய வழக்கினைக் காட்டும் அழகிய பகுதி யொன்றை ஈண்டு ஆண்டிருத்தலைக் கருத்திற் பதிக்கற்பாற்று ★ மற்றும் நிட்டாபரர், கருணுகரர் என்பவர்களை முறையே வடமொழி வேதாந்தியாகவும், தென் மொழி சிந்தாந்தியாகவும் அமைத்து, அவர்களது இறையனு பவ இயல்பினை தீரவுணர்த்த விழுத்தகை நல்லாசிரியராய சுந் தரர் 'அமையும் உங்கட்கு அவரவர் நிலையே' என ஏத்து தலும் தாழ்த்துதலுமில்லாது, இறுதிக்கண், பொதுமையாக மொழிந்து, சமய நெறி கூறும் இருவகை மொழிகளையும் உவப்பு உவர்ப்புமிலாது சமமாகக் கருதும் அவரது பெற்றிமையை அறிய அறிய, அது விம்மிதம் பயப்பதாகும்.

பெரும்பாலும் பேராசிரியர் ஆன்ற மொழியாகிய ஆரியத் தில் வழங்கும் சொற்களைப் பேச்சு வழக்கினிலும், செய்யுள் வழக்கினிலும் தமிழ்ப்படுத்தித் தகைமையொடு வெறுப்பினைக் காட் டாது மனோன்மணீயத்தில் வழங்கியுள்ளதை மேல் வாரியாகக் கற்போர் காண்பர். ஆனால் நாளடைவில், வடமொழிபோன்று'

★ Sakuntala: This Madhavi creeper though it be not the usual time for flowering, is covered with gay blossoms from the root to its top.
Piriyamvada: Is it really so, sweet friend?
Sakuntala: It is so. look yourselves.
Piriyamvada: (with eagerness) From this omen, Sakuntala, I annownce you an excellent husband who will very soon take you by the hand. (Sakuntala Act I)

தமிழ் மொழி வழக்கும் தமிழ்ச் சொற்களின் வழக்கும் அருகிச் சிதைந்தொழியாதவாறும், நெகிழவிடாதவாறும், தமிழ் மரபுக்கு இயல்பாய் அமைந்த முறையில் தனித் தொன்மை நிலையைத் தெரிக்கும் பழைய தமிழ் மொழி வழக்கை சுந்தரர் எடுத்து நிறுத்தப் பேரவா கொண்டனரென்பது அவர் வியந்து வணங்கிய தமிழ் வாழ்த்தில் நன்குணர்ந்து கொள்ளப்படும். ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்தால், தமிழ் மொழிச் சொற்களழிதலும், இனிமை கெடுதலும், நிலைமை திரிதலும், மயங்கி நிற்றலும் கூடும் என்றும், அதனுன் எழிலும் தூய்மையும் குறைய, இலக்கண வரம்பும் இலக்கிய அமைதியும் நிலைகெட்டுப் பிறழவும் நேருமெனவுங் கொண்டு, தமிழ் மொழி வளம்பெற விளங்கி வழங்கவும் ஆராவின்ப நிலையெய்திடவும், பேராசிரியர் சுந்தரர் தமிழ் மொழியின் தனித் தன்மையினை இறைத் தன்மையோடு இணைத்து பரிந்தேத்துவாராயினர்.

திணை மயக்கம் கவிதை இலக்கியத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் கவிதை இலக்கியத்திறனாய்வில் மயக்கத்திற்கு இடனின்று. மாற்றான் தோட்டத்து மல்லிகையானாலும் அதற்கு மணமுண்டெனக் கருதும் சுந்தரர் முற்றத்து முல்லைக்கு மணமில்லையெனும் கொள்கையுடையார்க்கு. வண்டமிழின் மாண்பினை, உண்மையியல்புக்கு இயைந்திட இயம்பியுள்ளார். 'யாது தமிழில் இருக்கிறது ? ஒன்றுமில்லை' என்று கூறிப் புறக்கணித்து நல்லுணர்ச்சி யற்றதமிழ்ப் புல்லர்களுக்கும் ஆரியப் புலவர்களுக்கும் அறிவு கொளுத்தும் வகையில் தமிழின் தூய பெருமையினை வலியுறுத்தப்பட்டதேயன்றி, வடமொழியைச் சுந்தரர் பழித்ததாகவும் இழித்து ஒதுக்கியதாகவும் காணப்படாதது. விருப்பு வெறுப்பற்று நடு நின்று நோக்குவார்க்குப் புலனாகும். சுந்தரரது பண்பையும் நோக்கையும் வாக்கையும் ஆராய்வதும் திறனாய்வுக்கலையைச் சார்ந்ததாகும். அத்திறனாய்வுக்குத் தக, தமிழுருவம் கொடுத்துத் தமிழைக் காத்து வளர்க்கும் பண்பாட்டையும் பொறுப்புணர்ச்சியோடு போற்ற வேண்டுவது தமிழால் வாழ்பவர்க்கும் தமிழ் காக்கும் மக்களுக்கும் இன்றியமையாததாகும். விழுமிய அருமைப்பாடுடைய தமிழ்த் தெய்வ வாழ்த்திற்கு மேன்மேலும் சுவைஞர்களைத் தேடிக்கொடுக்கும் திறனாய்வுப் பான்மையில்லாது அதற்கு மறு சூட்டுவது மடமையாகும். மற்றும், கற்குந்தோறும் பொருணுட்பங்களையும் மொழிச் செவ்வியினையும் வளமுறக் காட்டும் குறள், பத்துப் பாட்டு முதலாய சங்க நூற்களை மறுவற (தாழிசை - கக) நன்குணர. விளங்கச் செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு வற்புறுத்தும் சுந்தரரது தமிழ் வாழ்த்துக்கு, கருத்துச் சிறப்பில்லாத மறுவினைச் சூட்டிப் புகலுதலும் ஓர் வியப்பாகும்மே!

தமிழ் வாழ்த்தினையும், மனோன்மணீயத்தையும் கற்றோர் அதனில் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண்கிலாதும், நன்குணராதும், மாசினைக் கற்பித்து மறுவினை உள்ளுவரோ! கவியுள்ளத்தில் அமைந்துள்ள கருத்து நோக்கத்தழகைக் கண்டு, சுந்தரரது தமிழ் மொழிபாலுள்ள மனோபாவ வளத்தையும், அதனை உய்த் துணரவைக்கும் ஆற்றலையும் நன்குணரல் வேண்டும். தமிழ் வாழ்த்தின்கண் சுந்தரரது தமிழ் மொழியின் பாலுள்ள அனுபவக் காதல் மனோ பாவ வேகத்தில் இழைந்து பேசுகிறது. பக்திக் காதல் குழைந்து கொஞ்சுகிறது. கொஞ்சும் நிலையில், தமிழ் மொழியின் அற்புத இயல்பைக் கண்டு, அது ஆரியவய முற்று அழிந்து சிதையாதிருக்க சுந்தரர் விழைகிறார். தமிழின் சுவையின் வழி, அவர் தமிழ் மொழி எழுச்சி கொள்ளும் ஆற்றல், வீறு, தெளிவு, வளம் முதலாயின புலப்படும்படி, தான் அனுபவித்ததைத் அப்படியே, பிறரும் அனுபவிக்கும்படி சொற்களில் தேக்கிக் காட்டி, அறியாமை, வன்பு, மருள் முதலியவற்றை சீய்த்துத் துலக்கியும் விளக்கியுள்ளார்.

அருள் அன்பாகிய அறவுணர்வுகளுடன் பேராசிரியராய சுந்தரர், இருமொழிகளையும் நிரலே வைத்து அவற்றின் நிறை குறைகளை சீர்தூக்கிப் பார்த்து, ஒப்புமை காணல் வழி, அழகும், அழகற்றதும் இயல்பாய்த் தென்படவே, அந்த முரண்பாட்டில், தமிழ் மொழியின் அழகில் விழுப்புணர்ச்சி ஏற்பட, அம்மொழியினை ஆசிரியர் உளம் மகிழ்ந்து சுவைமலிந்த தெளி தமிழால் உள்ளத்தை உள்ளபடி ஏற்றமுற உவந்தேத்துவதில் குற்றம் காண்பது சாலவும் வருந்தத்தக்கது. பட்டாங்கு பயின்று தெளிந்து பண்பட்டு வாழத்தட்டியெழுப்பும் இத்தகைய விழிப்புணர்ச்சி இன்றியமையாததென்பது அறியப்பட்ட மெய்ம்மையாகும். தமிழ் மொழியின் அழகுணர்ச்சி ஆரியமயத்தில் சிக்கி மழுங்கி வழக்கொழிந்து போகாமலிருக்க மூன் எச்சரிக்கையாக, அவரது விழுமிய கலையுணர்வு.

'ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே'

என இவ்வாறு யாப்புறுத்தி வகை செய்த திறம், உரைகொண்டு மொழியலுறும் வரைநிலையுடையதன்று. மற்றும் அவரது உயர்கலையினை யுணர்தற்கும், அதன்நுணுக்கத்தை நுனித்தறியவும், பண்பாடு மிகவும் வேண்டற்பாலது. இத்தகைய உரைக்கொணு மாட்சியினை நுணிகி அறியாது, அமிழ் தன்ன தமிழ்த் தெய்வ வாழ்த்தில், மன னுூர்வின்றி மறு காணுவோர், தாம் கண்டதே காட்சி கொண்டதே கோலமென கருத்துடையராய், வேறு எதனை அனுபவித்துத்தான் இன்பங்கொள இயலும்?

ஏலாதி - திறனாய்வு

புலவர். தி. நா. அறிவுஒளி,
திருக்கழுக்குன்றம்,

முன்னுரை: அறிவுரை கூறுவதும், கேட்பதும் ஒருவகைப் பொய்ம்மை நடத்தையாகப் போலித் தன்மையாக ஆகிவிட்டிருக்கிறது. அறிவுரை சொல்பவரும் (சிலர் நீங்கலாக!) அதை மதிப்பதில்லை; போற்றியொழுகுவதில்லை. அறிவுரை கேட்பவரும் அதைப் பொருட்படுத்துவதில்லை. இந்நூற்றுண்டின் இரங்கத்தக்க 'அவலநகைச்சுவை நிலை' இது!

ஆனால், 'பிறர் நலனை நாடுவதே வாழ்க்கையின் நோக்கம்' என்ற பண்டைக்காலச் சான்றோர், உலக மக்களுக்கு - அவர் தம் நலனை - நல்வாழ்வைக் கருதி எழுதிய அறவுரைகள் தமிழில் அளவின்றி மலர்ந்துள்ளன.

"ஓர் 'அறநூல்' மட்டும் போதாதா?' ஏன் பலப் பல அற நூல்கள் மலர வேண்டும்?" என அயர்வோடு வினவுகின்றவர்களுக்கும் நாம் பொறுமையோடு விடை கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

இயற்கை கூட காலத்தை அறு பருவத் திருக்கூத்தாட்டம் ஆட வண்ண வண்ணக் கோலம் கொள்ளச் செய்துள்ளதே! நாம் அரிசியினின்று எத்தனை எத்தனை உணவு வகைகளையும் பலகார வகைகளையும் செய்து உண்ணுகிறோம்! ஒரே வகை உணவு போதாதோ? 'அறவுரை காலம், இடம், சூழ்நிலை, குமுகாய இயக்கம், அரசியல் அமைப்பு, புதியனவற்றின் வருகை ஆகியவற்றிற் கேற்ப பல்வகை இன்றியமையாத தன்மைகளை - மாறுதல்களைப் பெற்றே தீர வேண்டும்.

முப்பாலுக்குப் பின் நாலடியார் தோன்றி நாட்டில் ஒளியூட்டியது. அதன் பின் பல நூல்கள் — பதினெண்கீழ்க் கணக்கு அணியில்—தோன்றின. அவற்றுள் ஒன்றே ஏலாதி!

கணிமேதையார்; 'கணிமேதையார் ஈன்ற படைப்பே ஏலாதி. இவர், தமிழாசிரியர் மகனார் மல்லிவர்தோள் மாக்காயனார் என்பவரின் மாணாக்கர் என்பர். இந்நூலையும் 'கணி மேதாவியார்'

எனவும் அறிஞர் வழங்குவர். ஆசிரியர் பெயரை அவரியற்றிய நூலுக்கும் ஆகுபெயராய் வழங்குவது இலக்கிய உலக மரபாகும். 'திருவள்ளுவர்' படித்தேன் என்றும், 'கம்பரை' ஓது எனவும் வழக்கு உண்டு.

ஏலாதியின் சிறப்புப் பாயிரம்,

"இல்லற நூலேற்ற துறவறநூ லேயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து — நல்ல
அணிமேதை யாய்நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து."

எனப் புலவர் பெயர், சிறப்பு ஆகியவை பற்றிக் குறிக்கிறது.

'மல்லிவர்தோள் மாக்காயனார்' என்ற தொடரால், மாக்காயனார் மற்போரில் வல்ல மறவராக விளங்கினர் என அறியலாம் சிறுபஞ்ச மூலத்தை இயற்றிய காரியாசானும் இம் மாக்காயனாரின் மாணாக்கரே. எனவே ஏலாதி ஆசிரியரும் சிறுபஞ்ச மூலம் ஆசிரியரும் ஒரு சாலை மாணாக்கரென உணர முடிகிறது.

ஏலம் முதலிய மருந்துகளால் உருவானது ஏலாதியாகும். உடற்பிணி நீக்கி உடலும் உயிரும் வளர்ப்பது மருந்தாகிய ஏலாதி. இதுவோ, மனப்பிணி மாற்றி உடலும் உணர்வும் உயிரும் வளரத்துணையாகும் அறிவு விருந்தாகும் எனவே ஏலாதி காரணப்பெயராகவும், ஆகு பெயராகவும் அமைந்ததாம்.

இந் நூலில் எண்பது வெண்பாக்கள் உள. பல பாடல்கள் மகடூஉ முன்னிலைக் கூற்றாய் அமைந்துள்ளன.

'அறநூலின் அமைதி இதுதான்' எனப் பண்டை இலக்கணங்கள் திட்டவட்டமாக ஏதொரு வரையறையும் வகுக்கவில்லை. ஆயின், அற இலக்கியங்களைக் கொண்டு அவற்றினியல்பை நாம் தொகுக்கக் கூடும். வெண்பா யாப்புக்கும் அறத்துறைக்கும் நனி அணுக்க உறவு உளது. இதனைக் குறிப்பாக உணர்வது சிறப்பாகும்.

ஈற்றடி நலம்: வெண்பா யாப்பில் ஈற்றடியின் அழகும் ஆற்றலும். அமைப்பும் நுட்பமும் தனித் தன்மை வாய்ந்ததாகும். ஈற்றடியை வெற்றியோடு படைப்பது ஒரு தனி நுண்கலைத் திறமையேயாம். புகழேந்திப் புலவர், ஐயனாரிதனார், தண்டியார்

முதலியோர் இக்கலை நுணுக்கத்தில் கைவந்தோராவர். கணி மேதாவியாரும் அத்திறன் உள்ளவர் என அறிகிறோம் [1].

மொழியமைப்பு: கணிமேதாவியார் அரிய மொழியமைப்பு களைத் தன் நூலில் ஆண்டுள்ளார். அத்தொடர்களை மரபுத் தொடர்கள் போல வழக்காற்றில் பயன்படுத்தக் கூடிய முறையில் அமைந்துள்ளமை மிகவும் பாராட்டத் தக்கதாகும். [2] புலமையின் உயர்வு நூலின் மொழியமைப்புக் கலையினாலேயே தெளிவாகும். கணிமேதாவியார் ஒரு சில விடங்களில் இடர்ப் பாடான மொழியமைப்பைக் கையாண்டாலும், பெரும்பாலும் சிக்கலில்லாத இனிய மொழியமைப்பையே ஆண்டுள்ளார்

---

(1) துன்பந்துடைத்தல் அரிது (3), சாலும் பிறநூலின் சார்பு (5), தாய் அன்னன் என்னத்தகும் (6), எனைத்தும் அறியாமை யான் (10), நச்சாமை நோக்காமை நன்று (12), இல்லார்க்கிடர்தீர்த்தல நன்று (15), இறுதல் இல்வாழ்வே இனிது (16), ஞாலம் அறிந்த புகழ் (26), உள்ளத்தவாக உரை (27), கொன்னே இருத்தல் குறை (37), பாத்துண்பாண் ஏத்துண்பான் பாடு (44), இன்புற்று வாழ்வான் இயைந்து (50), கூடலொடுடலுளான் கூர்ந்து (51), மாற்றுரை மாற்றி வாழ்வார் (58), நூனோக்கி வாழ்வான் நுனித்து (59), இழுக்கும் இழவும் தரும் (62), பெருந்தவம் செய்தார் பெரிது (64), இடர் இன்று இனிது துயிலும் இன்று (65), தான் அகத்தே வாழ் வான் தக (71), எழுத்தின் வனப்பே வனப்பு (74), வைத்து வழங்கிவாழ் வார் (78)

---

(2) புனக்கொன்றை போலும் இழையார் (5), கயல் இயல் உண் கண்ணாய்! இளமை கழியும் பிணி மூப்பு இயையும் வளமை வலி இவை வாடும் (21), மையேர் தடங்கண் மயிலன்னாய் (28) மத்த மயிலன்ன சாயலாய்! (31), கூந்தல் மயிலன்னாய் (33) கொவ்வைபோல செவ்வாயாய் (34). பூவாதி வண்டு தேர்ந்துண் குழலாய்! (32! பண் ஆளும் சொல்லாய்! (35) இல்லார்க்கிடர் தீர்த்தல் நன்று (15) ஊனொடு கூறை எழுத் தாணி புத்தகம் பேனொடு மெண்ணும் எழுத்திவை — மாணொடு கேட்டெழுதி ஓதி வாழ்வார்க்கீந்தார் இம்மையான் வேட்டெழுத வாழ்வார் விரிந்து (63)

இவர் பல வடசொற்களைப் பாடலில் ஆண்டுள்ளமை வேண்டாத தொன்றேயாம். மொழியமைப்பும், சில கருத்துகளும் கொண்டு நோக்கிடின் கடைக் கழக காலத்தை ஒட்டிய காலத்து நூலாக ஏலாதியைக் கொள்ளுவதற்கில்லை; சற்று பிற்பட்ட காலத்ததாகவே தோற்றுகிறது.

30, 31 ஆம் பாக்கள் வடமொழித் தாக்குதலுக்கு ஏலாதி ஆசிரியர் அடிமையானவர் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. இவ்விரு பாக்களையும் இந்நூலுள் எதற்காகப் புலவர் சேர்த்தார் என்று புலனாகவில்லை. புலவர் கணிமேதாவியாரின் இவ்விரு பாக்களுக்காக நாம் கண்டிக்கவும் வேண்டியுள்ளது. பண்பாட்டுக்கு இசையாத கருத்துகள் அறநூலில் இடம் பெறுவது அறிவுடைமையோ? தமிழகத்திற்கு ஒவ்வாத அல்லாநெறியை—அழுக்கு நெறியை—உரைப்பது எதுவாயினும் நாம் கண்டித்துக் கடிந்து ஒதுக்குவதே அறமாகும். மேற்கூறிய இரு பாடல்களும் அறநூலில் இடம் பெறுந்தகுதியும் இல்லாதவையாம். புலவரின் பெருமையை மறைக்கும் இவ்விரு கரும் பாக்கள் நெஞ்சை யுறுத்துகின்றன.

நல்ல பாடல்கள்: கருத்தென்ற உயிரற்ற பாட்டு, எவ்வளவு சிலுசிலிர்ப்புடன் கூத்தாடினாலும் அறிஞர் நெஞ்சங்களில் சீரிய மதிப்பை அடைவதில்லை.

நல்ல பாடல் நல்ல துணையாகும்; உணர்வுக்கும், அறிவிற்கும் வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக உதவும். கம்பர் தம் நூலில் இடையிடையே அறங்கூறுபவராக அரிய உண்மைகளைக் கூறி வருவார். பாவியச் சுவை யூட்ட வேண்டியவர் பண்பையும் அறத்தையும் அறிவுறுத்த முனைகின்றார் எனின், புலவோரின் தனிக் கடமையது என உணர்ந்தே அம் முறை மேற்கொண்டார் எனத் தெளிதல் வேண்டும்.

பரதன், கைகேயியின் சூழ்ச்சியை அறியாதவன். கோசலை, 'உன் அன்னையின் சூழ்ச்சியால் இராமன் காடேகினான்' என்று கூறுகிறாள் குறிப்பாகப் பரதன் துணையதில் இருக்குமோ என்ற ஐயம் பரதன் நெஞ்சில் சுடுகிறது. தன் தூய்மையை வெளியிடுகிறான் ஒரு சூளுரை வாயிலாக! அந்தச் சூளுரையைக் கருவியாகக் கொண்டு கம்பர் 'இன்னின்ன குற்றங்கள் செய்தல் கூடாது' என உலகத்திற்கு அறநெறி புகட்டுகிறார்.

1. நமக்கு முன் வாழ்ந்தோர் எதிர்கால மக்கள் நலங்கருதிச் செய்து வைத்த அறச்செயல்கள் கெட்டழியுமாறு அறத்தைக் கொல்பவன் ;

2. அருளுணர்வற்ற கொடியவன்,

3 பிறர்க்குரிய மனைவியைக் கவரக் கருதி பிறர் விட்டுத் தலை வாயிலில் நின்ற ,இழிந்தோன்,

4. அயலார் மீது ஒரு காரண மு மின்றி சீற்றங் கொண்டவன்,

5. நெஞ்சின் கொடுமையால் உலகத்துயிர்களைக் கொன்று அதன் வழி உயிர் வாழ்பவன்,

6. அகப்பற்றும், புறப்பற்றும் அறவே துறந்து. உலக நல னுக்குத் தொண்டியற்றும் சான்றோர்க்குக் கொடுந்துன்பம் சூழ்பவன்,

7. பெண்கொலை என்னும் கொடுமை புரிபவன்,

8. தன்னரசனுக்குத் துணையாகப் போர் செய்ய முற்படுவதா கப் போர்க் களத்திற்கு அவனோடு ஒன்று பட்டுச் சென்று. பின்னர் பகைக்கு அச்சங்கொண்டு புறமுதுகு காட்டி ஓடியவன்,

9. பிறரிடம் இரந்து பெற்ற மிகச் சிறு பொருளைப் பெருஞ் செல்வமாக ஒருவன் கருதியிருக்க, அதனை வல்லடி வழக் கால் வலியக் கவர்பவன்,

என ... இத்தகு கொடுங்கயவர் ஆரிருள் அளறில் வீழ்வர் என உரைக்கிறார் ;

'' அறங்கெட முயன்றவன் அருளில் நெஞ்சினன்
பிறன்கடை நின்றவன் பிறரைச் சீறினோன்
மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்
துறந்தமா தவர்க்கருந் துயரஞ் சூழ்ந்துளோன்

குரவலர் குழலியை வாளிற் கொன்றுளோன்
புரவலன் தன்னொடும் அமரில் புக்குடன்
விரவலர் வெரிநிடை விழிக்க மீண்டுளோன்
இரவலர் இருநிதி யெறிந்து வௌவினோன் ''

முதலியவர்கள் அறங் கொன்றோர் என்பர் !

'மக்களுக்குக் குற்றங்களை எடுத்துக் காட்டி, இவற்றைச் செய்யக்கூடாது, செய்வதால் நமக்கும் பிறர்க்கும் தீங்கு நேரும்' என நேரிய முறையில் கூறினால் அறிஞர் அதனையுணர்ந்து திருந்தி யொழுகுவர். ஏனையோர் தம் மனம் போல் நடப்பர். அத்தகையவரைத் திருத்திச் செந்நெறி யொழுகச் செய்ய வேண்டுமேல் ஒறுப்பே தக்க கருவியாக அமைகிறது. சட்டங்கள் 'ஒறுப்பு' என்ற அச்சத்தை ஊட்டியே நேர்மையைக் காக்கின்றன. அக்கால மாந்தர் அரசின் ஒறுப்புக்கும் மேல், இறப்புக்குப் பின் நிரயத்தில் விழ்ந்து பல்வகைத் துன்பங்களுக்கு ஆளாக வேண்டும் என்ற அச்ச நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டியிருந்தனர். அந்த அளறில் சேர்வோரைப் பற்றிய பட்டியலே கம்பர் தருவதாகும்.

தீங்கு நினைப்பதும் செய்வதும் ஒருவகைக் கொடிய நோயே. இதனை ஒறுப்பாலும் அச்சத்தாலும் களைவதைவிட "மருத்துவ முறைகளால்" மாற்றுவதே சாலச் சிறந்ததாகும்.

தீமை தோன்றத் தனிமாந்தன் மட்டுமே காரணம் எனக் கருதும் எண்ணம் பழையது. குற்றம் தோன்ற அரசும், குமுகாயமும் கூடக் காரணமே! அடிப்படையான உண்மைகளைத் தெளிந்தே நோயை மாற்றவேண்டும். எனவே அறநூல்களின் தொண்டு புரட்சி சான்றதாகவும். பல பிற துறைகளோடு அணுக்க இணக்கத்தோடுங் கூடித் தொண்டாற்ற வேண்டிய அருங்காலம் இக்காலமே.

பழங் காலத்தினர் வாழ்வின் ஒவ்வோரணுவைக் கொண்டும் அஞ்சியிருந்தனர். அறிவின் ஆட்சி வளர வளர அச்சம் நீங்கி, ஆண்மை பெருகி வருகிறது. எனவே மனத் திருத்தத்திற்கு 'அச்சமூட்டுதல்' என்ற மருந்து பொருந்தியதன்று அஞ்சாமை மிகும் வாழ்வில் அறிவு நெறியே மதிக்கப்பெறும். ஆகவே அறநூல்கள் அறிவியலோடு இணைய வேண்டும். அறிவியல் நெறியும் அறவியல் நெறியும் இணைந்து உருவாக்கும் 'அற அறிவியல்' மரபு உலகத்திற்கு மிகுபயன் நல்குவது திண்ணமாகும்

பண்டைத் தமிழறிஞர் தனி மாந்தன் திருந்துவதையே வற்புறுத்தினர். ஒவ்வொரு தனியரும் திருந்தினால் உலகமே திருந்தும் என்பது பண்டையோர் கொள்கை.

இக்காலம் கூட்டுறவுக்காலம்! தீமையானாலும் நன்மையானாலும் கூட்டமாகக் கூடிச் செய்யுங் காலம் இது ஆகவே, அறங்கூட குமுகாயம் அளா

விய வகையில் அறிவுறுத்தப்பட்டு, மேற்கொள்ளப்பட வேண்டும். அறத்துறையில் 'உலகளாவிய' முயற்சி இனியே மேற்கொள்ளவேண்டும்.

ஏலாதி தனி மாந்தர் அறங்கூறும் நூலே. ஆயின், அந்தக் கருத்துகளைக் குமுகாய அளவுக்கு வளர்த்துக் கொள்வதில் தவறில்லை.

"எவன் நெஞ்சநிறை யுடையவனோ; எவன் நீர்மை இயல்புடையவனோ எவன் வறியார்க்கு வளமியும் வள்ளன்மையுடையவனோ; எவன் பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்பவனோ, எவன் பொய் கூறுமலும் புலால் உண்ணுமலும் பிறர் மறையை வெளியிடாமலும் வாழ்பவனோ அவனே எல்லா உயிர்களுக்கும் தாய் போன்றவன் ஆவான்!" என்கிறார் கணி மேதையார்!

"நிறையுடைமை நீர்மையுடைமை கொடையே
பொறையுடைமை பொய்மை புலாற்கண் மறையுடைமை
வேயன்ன தோளாய்! இவை உடையான் பல்லுயிர்க்கும்
தாய் அன்னன் என்னத் தகும்." (ஏலாதி: 6)

(தொடரும்)

கையறவு.

திரு. கோ. சுப்பராய பிள்ளை அவர்கள் கரந்தையில் ஒரு நற்குடியிற் தோன்றி வாழ்ந்து வந்த தமிழன்பர். தமிழ் நாட்டரசின் நீதித்துறையில் நசீராக பணிபுரிந்து ஓய்வுபெற்றிருந்தார்கள். உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றுள்ள திரு. S. பஞ்சநதம் பிள்ளை எம்.ஏ., எல்.டி. அவர்களின் தாய்மாமன் திரு. சுப்பராய பிள்ளை அவர்கள் சங்கத்தின் தொடக்க காலத்திலேயே உறுப்பினராகச் சேர்ந்து சங்க நலனில் ஈடுபாடுடையவராக இருந்துவந்த பெரியார்களில் ஒருவர். சில ஆண்டுகள் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார்கள். 1962 ஆம் ஆண்டில் இரண்டாயிரம் வெண்பொற் காசுகளை சங்கத்திற்கு நன்கொடையாகத் தந்துதவினார்கள் கடந்த சில ஆண்டுகளாக உடல் நலமிழந்திருந்தார்கள் 18—1—72-இல் தன்னுடைய 88-வது அகவையில் இயற்கை யெய்தினார்கள். அவர்களின் குடும்பத்தாருக்கு சங்கத்தாரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் இன்னுயிர் இறைவன் திருவடி நிழலில் பேரின்பமெய்துமாக.

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

10

தமிழ் மொழி அதன் உயரிய பண்புகளுடன் வளர இன்றியமையாத பல முயற்சிகளில் ஒன்று தமிழ் மக்கள் அன்றாட வாழ்க்கையில் கனியிருப்பக் காய்கவராது பிறமொழிச் சொற்களில்லாமல் இனிய தமிழ்ச் சொற்களைப் பேசியும் எழுதியும் வருதல் வேண்டும். அவ் வழியில் சென்ற இதழ்களின் தொடர்ச்சியாக நீதி மன்றங்களில் பொதுமக்கள் பயன் படுத்த நேரும் சில பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. இவற்றைப் பயில்வார் பயன்படுத்துவாராக.

எவையேனும் சில சொற்களுக்குத் திருத்தங்கள் ஏற்றதெனக் கருதினுல் வழக்கம் போல் அன்பர்கள் அவைகளை எழுதியனுப்ப வேண்டுகிரேும்.

மனு (Petition)	—	விண்ணப்பம்
Plaint	—	வழக்குரை தாள்
Written Statement	—	எதிர்வழக்குரை தாள்
Affidavit	—	ஆணை உறுதித்தாள்
Counter-affidavit	—	எதிர் ஆணை உறுதித்தாள்
மனுதார்	—	விண்ணப்பிப்பவர்
எதிர்மனுதார்	—	எதிர் விண்ணப்பிப்பவர்
வாதி (Plaintiff)	—	வழக்கர், வழக்காளி
பிரதிவாதி (Defendant)	—	எதிர் வழக்கர், எதிர் வழக்காளி
Appellant	—	மேன்முறையீட்டாளர்
Respondent	—	எதிர் மேன்முறையீட்டாளர்
சாட்சி	—	சான்று கூறுநர், சான்றுரையர்
சம்மன்	—	அழைப்பு ஆணை
ஈரங்கி	—	வழக்குக் கேட்பு
ஆஜராக	—	முன்தோன்ற

தாவா, கேசு, வியாச்சியம்	—	வழக்கு
சூட் (Suit) சிவில் சூட் (Civil Suit)	}	உரிமை வழக்கு
பாப்பர் சூட்	—	வறியர் வழக்கு
கிரிமினல் கேசு (Criminal Case)	}	குற்ற வழக்கு
அப்பீல் (Appeal)	—	மேன் முறையீடு
வக்காலத்து	—	வழக்குரிமை
வக்காலத்து நாமா	—	வழக்குரிமைத் தாள்
தாக்கல்	—	சேர்ப்பித்தல்
காலாவதி	—	காலக் கடப்பு
Judgment	—	தீர்ப்பு
டிக்ரி (Decree)	—	தீர்ப்பு ஆணை
ராஜிநாமா	—	ஒத்து இசைவு
Stay order	—	தடை ஆணை
Argument	—	தகவுரை, பொருந்துரை
Writ	—	நீதிப் பேராணை
Point of law	—	சட்டக் கருத்து
Point of fact	—	பொருண்மைக் கருத்து, உண்மைக் கருத்து
வக்கீல், அட்வோகேட்	—	வழக்குரைஞர்
லாயர் (Lawyer)	—	சட்ட வல்லுநர்
வக்கீல் குமாஸ்தா	—	வழக்குரைஞர் எழுத்தர்
கவர்ன்மெண்ட் பிளீடர் (Govt. Pleader)	—	அரசு வழக்குரைஞர்
பப்ளிக் பிராசிகியூடர் (Public Prosecutor)	—	குற்றப் பொது வழக்குநர்
கோர்ட்	—	நீதி மன்றம்
சிவில் கோர்ட்	—	வழக்கு மன்றம்
கிரிமினல் கோர்ட்	—	குற்ற மன்றம்
முன்சீப் கோர்ட்	—	உரிமை மன்றம்
சப் கோர்ட்	—	துணை நீதி மன்றம்
டிஸ்டிரிக்ட் கோர்ட்	—	மாவட்ட நீதி மன்றம்
செஷன்ஸ் கோர்ட்	—	அமர்வு நீதி மன்றம்

ஹைகோர்ட்	—	உயர் நீதி மன்றம்
சுப்ரீம் கோர்ட்	—	தலைமை நீதி மன்றம்
சப் மாஜிஸ்டிரேட்	—	துணை முறைமையர்
அடிஷனல் மாஜிஸ்டிரேட்	—	இணை முறைமையர்
சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்	—	கீழ்க்கோட்ட முறைமையர்
டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்	—	மாவட்ட முறைமையர்
அடிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்	—	மாவட்ட இணை முறைமையர்
ஜட்ஜ் (Judge)	—	நடுவர்
செஷன்ஸ் ஜட்ஜ் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் (Dt. & Sessions Judge)	}	மாவட்ட நடுவர்
ஹைகோர்ட் ஜட்ஜ் (High Court Judge)	—	உயர் நீதி மன்ற நடுவர்
Chief Justice	—	தலைமை நடுவர்

கையறவு.

புலவர். பொ. வே. சோமசுந்தரனாரவர்கள் இருபதாம் நூற்றாண்டின் சிறந்த உரையாசிரியர்களில் ஒருவர். அவர்கள் திருத்துறைப்பூண்டிக் கருகிலுள்ள பெருமழையூரில் வாழ்ந்து வந்தார்கள். பரிபாடல், ஐங்குறுநூறு, குறுந்தொகை பத்துப்பாட்டு போன்ற பல சங்க இலக்கிய நூற்களுக்கும் காப்பியங்களில் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் சிலவற்றிற்கும் விரிவுரைகள் எழுதியுள்ளார்கள். இலக்கண நூற்களில் புறப்பொருள் வெண்பா மாலைக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார்கள் இவ்வுரைகள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளாக பயனளித்து வருகின்றன. புலவரவர்கள் 3—1—72 இல் திருவடி நீழலை யடைந்தார்கள். தமிழ்ப் பணிகளில் ஒரு துறையில் நல்ல பணியாற்றிய புலவரவர்கள் மறைவுக்கு வருந்துகின்றோம்